383

அன்னூர் ஊராட்சி ஒன்றியம் கரியாம்பாளையம் ஊராட்சி கோவை மாவட்டம்

ஊராட்சி மன்றத்தலைவர், கரியாம்பாளையம் ஊராட்சி, அன்னூர் வட்டாரம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திருமதி.வ.செல்வி

ந.க.எண்: 1771/2016/ஆ1 நாள்: 29.2.2024

பொருள் : மனைப்பிரிவு -அன்னூர் வட்டாரம் - கரியாம்பாளையம் ஊராட்சி மனைப்பிரிவு க.ச.எண்: 118/1, 2A, 2B, 119/7A, 7B, 120/3 -ல் 6.30 ஏக்கர் பரப்புக் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதிக்கு வரப்பெற்றது - அரசாங்க மதிப்பீடு செலுத்தப்பட்டது - ஊராட்சிக்கு அபிவிருத்தி மாற்ற நில உபயோக மாற்ற பயன்பாட்டு கட்டணம் செலுத்துதல் மற்றும் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1. நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின்ந.க.எண்:CBEREGN/SELKUJAK/2023/2024/TCP நாள்:26-2-2024
2.எஸ்.தினேஷ் த/பெ எம்.சிவக்குமார், 177/5C, தெய்வாணை இல்லம், எவரெஸ்ட் மஹாஸ்ரீ அவென்யூ, விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் -641035 என்பவரது நிலப்பயன்பாட்டுக்கட்டணம் செலுத்திய நாள்:28-2-24

கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் வட்டாரம் கரியாம்பாளையம் ஊராட்சியில் பார்வையில் காணும் கடிதத்தின் மூலம் மனைப்பிரிவுக்கான க.ச.எண்: 118/1, 2A, 2B, 119/7A, 7B, 120/3 -ல் 6.30 ஏக்கர் பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை(1) ல் காணும் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதத்தின் மூலம் ம.வ.(கோ.ம) எண்:57/2024 என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 3% விற்பனை மதிப்பான ரூ.217470/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினேழாயிரத்து நானூற்று எழுபது மட்டும்) அரசு கணக்கில் 28.2.2024 செலுத்தப்பட்டு சலான் -2024228006265 நாள்:28-2-2024 ன்படி பெறப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய பரீசீலனைக் கட்டணம் ரூ.7000/- செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு விண்ணப்பததாரால் தண்ணீர் வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு 08/2023-எண எண்ணிட்டு ஊராட்சி மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1.மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் rail

Scanned with OKEN Scanner

corridors, பொது பாதை மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம் அதிக உயர் மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது.

2.மனைப்பிரிவு கட்டமைப்பு இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர் மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு அமைக்காவிடில் அங்கீகாரம் இரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3.இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஊராட்சி மன்றத்தலைவர்
தலைவர்/செயல் அலுவலர்
கூடுதல் பொறுப்பு
கரியாமபாளையம் ஊராட்சி
அன்னூர் வட்டாரம்

பெறுநர்:

எஸ்.தினேஷ் த/பெ எம்.சிவக்குமார்,
177/5C, தெய்வாணை இல்லம்,
எவரெஸ்ட் மஹாஸ்ரீ அவென்யூ,
விளாங்குறிச்சி,
கோயம்புத்தூர் -641035

நகல்:

1.நகர் ஊரமைப்புத்துறை துணைஇயக்குநர்
டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோயம்புத்தூர்.

2. சார்பதிவாளர் அலுவலகம்,
அன்னூர்

Scanned with OKEN Scanner